ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006**

**R.C.No.2171/C2/PINDICS/SS/2021/ dated 24.03.2022**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2021–22 ஆம் ஆண்டு – தொடக்க நிலை முதல் மேல்நிலை வகுப்பு வரை உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கான – ஆசிரியர் செயல் திறன் மதிப்பீடு – சார்ந்து.

பார்வை : 1. மத்திய கல்வி அமைச்சக, திட்ட ஏற்பளிப்புக் குழு கடிதம் எண். F.No.28-2/2021-IS-9, நாள் 03.09.2021, (வ.எண்– 77.3, 79.6).

*****

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ், பார்வை 1 – இல் உள்ள PAB Minutes –ல் குறிப்பிட்டுள்ளபடி, 2021–2022 ஆம் கல்வி ஆண்டில், Quality தலைப்பின்கீழ், மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து ஆசிரியர்களும், சுயமதிப்பீடு செய்து தங்களை மேம்படுத்திக் கொள்ள ஆசிரியர் செயல் திறன் மதிப்பீடு (Performance Idicators) என்ற செயல்பாட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு ஆசிரியரும், வகுப்பறை நிகழ்வுகளை வடிவமைத்து மாணவரின் கற்றல் அடைவுநிலையினை மேம்படுத்துதல் மற்றும் மாணவர்களின் கற்றல் மேம்பாட்டிற்கு அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வாயிலாக மாணவர்களுக்கு முன் உதாரணமாக திகழ்தல், பெற்றோர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து மாணவர்களின் கற்றல் நிலை குறித்து கலந்துரையாடுதல், அது தொடர்பாக மேற்கொள்ளும் தமது செயல்திறன்களை (Performance) தாங்களாகவே சுயமதிப்பீடு செய்வதற்காக இச்செயல்பாடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்செயல் திறன்களை ஒவ்வொரு ஆசிரியரும் அடைந்து அதனை முழுமையாக பின்பற்றுவதை சுயமாக மதிப்பீடு செய்யவும், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியப் பயிற்றுநர்கள் மேலாய்வுக் குறிப்பு எழுதிடவும், தேவையான எளிய குறியீடுகளுடன் (Indicators) வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இக்குறியீடுகளின் உதவியுடன் ஆசிரியர்கள் தாங்களாகவே தங்களின் செயல்பாட்டினை சுய மதிப்பீடு செய்து கொள்ள ஏதுவாக நான்கு தர அளவு கோலில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் தலைமை ஆசிரியர்கள்/ஆசிரியப் பயிற்றுநர்கள், ஆசிரியர்களின் கற்பித்தல் செயல்பாட்டினை ஆய்வு செய்வதன் மூலம், தேவையான முன்னேற்ற ஆலோசனைகள் வழங்க இயலும்.

ஆசிரியர் சுய மதிப்பீடு 2014–15 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தொடக்கநிலையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மட்டும் (Teacher handling Classes 1 to 8 in Primary, Middle, Secondary and Higher Secondary) செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 2021–2022 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஒன்று முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து ஆசிரியர்களும் சுய மதிப்பீடு செய்ய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

ஆசிரியர் செயல் திறன் மதிப்பீடு (Performance Idicators), ஆசிரியர்கள் அவர்களாகவே தங்களது செயல்திறனை மதிப்பிடுவதற்கான ஒரு கருவியாக இருப்பதால், அனைத்து நிலைகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு உதவும் ஒரு கருவியாகக் கொண்டு ஆசிரியர்களின் சுய மதிப்பீட்டுக்கான வழிகாட்டி மற்றும் கருவியை 2019 ஆம் ஆண்டு தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) உருவாக்கியுள்ளது. இந்த கருவியை ஆரம்ப நிலை முதல் மேல்நிலை வரை பணிபுரியும் எந்த ஆசிரியரும் பயன்படுத்தலாம்.

2021–2022 கல்வியாண்டில், 9, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு ஆசிரியர்களுக்கு இதனை விரிவுபடுத்தும் நிலையில், தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் (NCERT) வடிவமைக்கப்பட்டுள்ள இப்படிவத்தினை நமது மாநில தேவைக்கேற்ப பல்வேறு விவரங்களை இணைத்து தமிழில் மொழிப்பெயர்த்து, மறுவடிவமைப்பு செய்து, மேலும் ஆசிரியர்கள் எளிதில் பயன்படுத்தி தங்களது சுயமதிப்பீட்டு விவரங்களை TNEMIS portal–இல் பதிவேற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இச்செல்முறைகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர் செயல் திறன் மதிப்பீடு சார்ந்த வழிகாட்டு நெறிமுறைகளையும் (Guidelines both in English and Tamil) மற்றும் ஆசிரியர், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர் நிரப்ப வேண்டிய விவரங்கள் அடங்கிய மாதிரி (Model format) படிவத்தினையும் (Soft Copy only) மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் தொடக்க நிலை முதல் மேல்நிலை வகுப்பு வரை உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் கிடைக்கப் பெற அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இந்த செயல்பாடு சார்ந்து கள அளவில் ஒவ்வொரு ஆசிரியர், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர் செய்ய வேண்டிய விரிவான வழிகாட்டுதல்கள் மற்றும் TNEMIS portal–இல் பதிவேற்றம் செய்ய வேண்டிய முழுமையான தகவல்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

மேலும், பார்வை 1 – இல் உள்ள PAB Minutes –ல் குறிப்பிட்டுள்ளபடி, 2021–2022 ஆம் கல்வி ஆண்டில் தொடக்க நிலை முதல் மேல்நிலை வகுப்பு வரை உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கான – ஆசிரியர் செயல் திறன் மதிப்பீடு (Performance Indicators) என்ற இச்செயல்பாட்டிற்காக (மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியின் விவரம் இணைக்கப்பட்டுள்ளது) தொடக்க நிலையில், ஆசிரியர் ஒருவருக்கு ரூ. 10 வீதம் 1,91,506 ஆசிரியர்களுக்கு ரூ.19.15 இலட்சமும், இடைநிலையில் 1,10,889 ஆசிரியர்களுக்கு ரூ.11.08 இலட்சமும் என மொத்தம் ரூ.30.23 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச் செயல்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள Teacher Appraisal Format - Performance Indicators (both Elementary and Secondary Level) என்ற தலைப்பில் உள்ள நிதி ரூ.30.23 இலட்சம் **பள்ளிகளில் உள்ள இணையதள செலவினங்களுக்காக** இணைப்பில் உள்ளவாறு மாவட்டங்களுக்கு விடுவிக்கப்படுகிறது. விடுவிக்கப்படும் நிதிக்கான பயன்பாடு சார்ந்த விரிவான வழிகாட்டுதல்கள் பின்னர் தெரிவிக்கப்படும். அதுவரை விடுவிக்கப்பட்ட நிதியை அந்தந்த மாவட்ட திட்ட அலுவலக வங்கிக் கணக்கில் வைத்திருக்க அனைத்து மாவட்டத் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு:

1. ஆசிரியர் செயல் திறன் மதிப்பீடு சார்ந்த வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines – both in English and Tamil)
2. ஆசிரியர், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர் நிரப்ப வேண்டிய விவரங்கள் அடங்கிய மாதிரி படிவம் (Model Format)
3. மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியின் விவரம்

மாநில திட்ட இயக்குநருக்காக

24/3/22

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

## Performance Indicators –District wise fund allotment

| S.No. | District | No. of Teachers at Elementary level | No. of Teachers at Secondary level | Total No. of Teachers | Unit cost (In lakh) | Amount (In lakh) |
|---|---|---|---|---|---|---|
| 1 | ARIYALUR | 2667 | 1614 | 4281 | 0.0001 | 0.4281 |
| 2 | CHENGALPATTU | 4855 | 2924 | 7779 | 0.0001 | 0.7779 |
| 3 | CHENNAI | 5253 | 4719 | 9972 | 0.0001 | 0.9972 |
| 4 | COIMBATORE | 6279 | 4137 | 10416 | 0.0001 | 1.0416 |
| 5 | CUDDALORE | 7111 | 3905 | 11016 | 0.0001 | 1.1016 |
| 6 | DHARMAPURI | 4974 | 3255 | 8229 | 0.0001 | 0.8229 |
| 7 | DINDIGUL | 7152 | 3272 | 10424 | 0.0001 | 1.0424 |
| 8 | ERODE | 5698 | 3181 | 8879 | 0.0001 | 0.8879 |
| 9 | KALLAKURICHI | 4454 | 2306 | 6760 | 0.0001 | 0.676 |
| 10 | KANCHEEPURAM | 2860 | 1699 | 4559 | 0.0001 | 0.4559 |
| 11 | KANNIYAKUMARI | 3642 | 3850 | 7492 | 0.0001 | 0.7492 |
| 12 | KARUR | 3450 | 1598 | 5048 | 0.0001 | 0.5048 |
| 13 | KRISHNAGIRI | 5865 | 3179 | 9044 | 0.0001 | 0.9044 |
| 14 | MADURAI | 7884 | 5047 | 12931 | 0.0001 | 1.2931 |
| 15 | NAGAPATTINAM | 5202 | 2440 | 7642 | 0.0001 | 0.7642 |
| 16 | NAMAKKAL | 4399 | 2773 | 7172 | 0.0001 | 0.7172 |
| 17 | PERAMBALUR | 1835 | 1133 | 2968 | 0.0001 | 0.2968 |
| 18 | PUDUKKOTTAI | 6302 | 3215 | 9517 | 0.0001 | 0.9517 |
| 19 | RAMANATHAPURAM | 4794 | 2478 | 7272 | 0.0001 | 0.7272 |
| 20 | RANIPET | 3317 | 1887 | 5204 | 0.0001 | 0.5204 |
| 21 | SALEM | 8694 | 5371 | 14065 | 0.0001 | 1.4065 |
| 22 | SIVAGANGAI | 4980 | 2404 | 7384 | 0.0001 | 0.7384 |
| 23 | TENKASI | 4517 | 2105 | 6622 | 0.0001 | 0.6622 |
| 24 | THANJAVUR | 6829 | 3683 | 10512 | 0.0001 | 1.0512 |
| 25 | THE NILGIRIS | 1800 | 1173 | 2973 | 0.0001 | 0.2973 |
| 26 | THENI | 4144 | 2212 | 6356 | 0.0001 | 0.6356 |
| 27 | THOOTHUKKUDI | 5828 | 2996 | 8824 | 0.0001 | 0.8824 |
| 28 | TIRUCHIRAPPALLI | 7699 | 5051 | 12750 | 0.0001 | 1.275 |
| 29 | TIRUNELVELI | 4856 | 2768 | 7624 | 0.0001 | 0.7624 |
| 30 | TIRUPATTUR | 3148 | 1913 | 5061 | 0.0001 | 0.5061 |
| 31 | TIRUPPUR | 5751 | 2748 | 8499 | 0.0001 | 0.8499 |
| 32 | TIRUVALLUR | 7301 | 4212 | 11513 | 0.0001 | 1.1513 |
| 33 | TIRUVANNAMALAI | 7657 | 4375 | 12032 | 0.0001 | 1.2032 |
| 34 | TIRUVARUR | 4346 | 2090 | 6436 | 0.0001 | 0.6436 |
| 35 | VELLORE | 3888 | 2248 | 6136 | 0.0001 | 0.6136 |
| 36 | VILLUPURAM | 5743 | 3147 | 8890 | 0.0001 | 0.889 |
| 37 | VIRUDHUNAGAR | 6332 | 3780 | 10112 | 0.0001 | 1.0112 |
| | **Grand Total** | **191506** | **110888** | **302394** | **0.0001** | **30.2394** |